# ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## ஊவா மாகா சபை அரசாங்க சேவையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உபதேசகர் பதவியின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்

ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் கால்நடை அபிவிருத்தி உபதேசகர் பதவியின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய தீவின் எப்பிரதேசத்திலும் வதியும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2020.10.29 ஆகும்.

ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்: கால்நடை அபிவிருத்தி உபதேசகர் 111 ஆம் தரம்

சம்பள அளவீடு (மாதாந்தம்): பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 ன் MN 3 – 2016 சம்பள குறியீடு இலக்கத்திற்கு ஏற்ப ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 - 57,550/-.

**02. ஆட்சேர்ப்பிற்கான பொதுவான தகைமைகள்:**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவு செய்ததன் ஊடாகவோ இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சகல விண்ணப்பதாரர்களும் ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை மேற்கொள்ளுவதற்கும் போதுமான உள மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் மற்றும் நன்னடத்தையுடன் கூடியவராக இருத்தல் வேண்டும்.

(இ) ஏதேனும் மதத்திற்கு மதகுருவாக உள்ள எந்தவொரு நபரும் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமையற்றவர்களாவார்கள்.

(ஈ) ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவையுடைய விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(உ) அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்ட பின்னர் மேலும் பதவி வெற்றிடங்கள் இருக்குமாயின் மாத்திரம், ஏனைய மாகாணங்களில் இருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

(ஊ) வயது: விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு அதிகமாகாமலும் இருத்தல் வேண்டும்.

**03. கல்வி தகைமைகள் :**

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் கூடிய ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சா/த) பரீட்சையில சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) துறைசார்ந்த கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டுடன் பாடங்களுடன் கூடிய விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பாடத்திட்டதிற்குரிய பாடங்கள் மூன்றில் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். (பௌதீக விஞ்ஞானம், இரசாயண விஞ்ஞானம், உயிரியல், ஒருங்கினைந்த கணிதம், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்காக விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம்)

**04. தொழில்சார் தகைமைகள்:**

(அ) மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படும் இரண்டு வருட கால்நடை டிப்ளோமா அல்லது இரண்டு வருட விவசாய டிப்ளோமாவினை பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) தொழில் துறைக்கு ஏற்ப தேசிய தொழில்சார் திறன் (NVQ 6) மட்டத்திலான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

(இ) உயர் கல்வி அமைச்சினால் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப தகைமைகளுக்கு சகல விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளை பெற்றிருத்தல்.

**05. சேவைக்கு அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(அ) இப்பதவியானது நிரந்தரமானது. ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதிய முறைப்பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

(ஆ) ஆட்சேர்ப்பு செய்யப்படுபவர்கள் ஊவா மாகாணத்தின் எந்தவொறு பிரதேசத்திலும் கடமையாற்ற உடன்பட வேண்டும்.

(இ) இப்பதவிக்காக ஏனைய மாகாணங்களில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்திற்குள் குறைந்தப்பட்சம் ஆறு (06) வருடங்கள் கடமைப் புரிய வேண்டும்.

(ஈ) அரச கரும மொழி அல்லாத மொழியில் பணிக்கு அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர் சேவையினை நிரந்தரப்படுத்துவதற்கு முன்னர் ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) கால்நடை அபிவிருத்தி உபதேசகர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர் பொது நிருவாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் விதப்புரைகளுக்கு ஏற்ப குறித்த மட்டத்தில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**06. ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் உடைய விண்ணப்பப்படி எண்ணிக்கை, நிலவும் வெற்றிட எண்ணிக்கையை விட அதிகமாக காணப்படுமாயின் மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு போட்டிப் பரீட்சையில் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் அடிப்படையில் அதிகபட்ச முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதோடு, அவ்வாறு இல்லாவிடின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படும் நேர்முகப் பரீட்சையின் ஊடாக மாத்திரம் தகைமைவாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். நேர்முக பரீட்சைக்காக புள்ளிகள் ஏதும் பெற்றுத்தரப்படமாட்டாது.

பணிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக தேவையான தகைமைகளை பெற்றுக் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவதாவது விண்ணப்பதாரியினால் குறித்த சகல தகைமைகள் மற்றும் குறிப்பிட்ட வயது எல்லையினை விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல விதத்திலும் பூரணமாக்குவதாயின் மாத்திரம் ஆகும்.

**07. விண்ணப்பிக்க வேண்டிய முறை:**

இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தினை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04 வரையிலான பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 05 தொடக்கம் 09 வரையிலான தகவல்கள் இரண்டாம் பக்கத்திலும் ஏனையன மூன்றாம் பக்கத்திலும் காணப்படும் விதத்தில் விண்ணப்பப்படிவத்தினை தயார்செய்ய வேண்டியதோடு, ஒவ்வொறு தலைப்பும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப தெளிவாக தத்தமது கையெழுத்தினாலேயே பூரணப்படுத்துதல் வேுண்டும். **விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமர்வதற்கு எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணமாக்கப்பட வேண்டும். தமிழ் மொழியில் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் தலைப்பானது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும்.**

பூரணமாக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2020.10.29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு “செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இலக்கம் 14/4, பீலிபொதகமை வீதி, பிங்கராவை, பதுளை” என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தினை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூளையில் **“ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி உபதேசகர் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020”** என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

**08. கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரினால் / சமாதான நீதவான் ஒருவரினால் / சத்திய பிரமாண ஆணையாளரினால் / பொது நொதாரிஸ் / நீதிபதி/ முப்படையின் அதிகாரம் உள்ள அலுவலர் / வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியிலுள்ள பொலிஸ் சேவையின் அலுவலர்/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியினை வகிக்கும் நிறைவேற்று மட்ட அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்டிதல் வேண்டும்.

**09. பரீட்சை கட்டணம்:**

இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செற்வதற்கான பரீட்சை கட்டணம் ரூபா. 900/- ஆகும். இத்தொகையை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு செயலாளரின் மக்கள் வங்கி முத்தியங்கனை கிளையின் கணக்கு இலக்கம் 269-100-148-440-477 ற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டில் காணப்படும் எந்தவொறு மக்கள் வங்கி கிளையிலும் பணமாக செலுத்தி அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி அனுப்ப வேண்டியது கட்டாயமாகுவததோடு, தேவை கருதி அதன் நிழல்பிரதியினை தம்மிடம் வைத்திருத்தல் எதிர்கால நடவடிக்கைகளுக்கு பயன்தக்கதாகும். எந்தவொறு காரணத்திற்காகவும் இப்பரீட்சை கட்டணமானது திருப்பி செலுத்தப்படமாட்டாது.

10. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு இவ்வறிவித்தலின் சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் பரிசீலனையின்றி பரீட்சைக்கு அமர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். போட்டிப் பரீட்சையில் அமர்வதற்காக அனுமதிப் பத்திரம் வழங்குதல் விண்ணப்பதாரர் குறித்த பதவிக்கான தகைமைகளை கொண்டுள்ளார் எனக் கருதப்பட்படமாட்டாது. நேர்முக பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பூரணப்படுத்தாமை தெரியவந்தால் அவ்விண்ணப்பதாரி நியமனத்தினை பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவராக கருதப்படும்

11. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சை பிரிவின் ஊடாக நடாத்தப்படும். பரீட்சையானது பதுளை நகரத்தில் மாத்திரமே நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் முழு பரீட்சைக்காகவும் ஒரு மொழி மூலத்திலேயே அமர வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை முன்வைத்த பின்னர் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12. பரீட்சை தினத்தன்று பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை சான்றுப்படுத்துவதற்காக ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுப்படியாகும் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுப்படியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாவணங்களுக்கு புறம்பாகு வேறு ஏதேனும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**13. போட்டிப் பரீட்சையின் விடய ஆய்வு:**

இப்பரீட்சையானது வினாத்தாள் 02 ன் கூடியதாகும். பரீட்சார்த்தியின் கடமை பொறுப்பு நடவடிக்கைகளுக்கான திறைமைகளை பரீசீலனை செய்யும் முகமாக இப்பரீட்சைத்தாள் அமையும்.

| வினாத்தாள் | | காலம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100 | 40% |
| 2 | விடய ஆய்வு தொழில்நுட்ப பரிசீலனை | 2 மணித்தியலம் | 100 | 40% |

| | |
|---|---|
| மொழித் திறன்: | இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் கருத்து தெறிவிப்பு கிரகித்தல், இலக்கனம், எழுத்துப்பிழை, மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்ட கடிதத்தினை வரைதல், தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு வரைபு மற்றும் அட்டவணை தயாரித்தல், தரப்பட்டுள்ள பந்தியினை சாராம்சம் செய்தல். தரப்பட்டுள்ள சொற்கள் பலவற்றின் கருத்துக்களை தனி எழுத்தாக எழுதுதல் மற்றும் இலகுவான இலக்கன பயன்பாடு பற்றிய அறிவை பரீசீலனை செய்யும் விடயத்துடன் தொடர்புடைய வினாக்களுடன் கூடியதாக அமையும். |
| நுண்ணறிவு | இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் எண்ணியல் திறன், தர்க்கத்திறன, பகுப்பாய்வு, சுருக்கும் திறன், விரைவாக தீர்மானம் எடுக்கும் திறன் ஆகியவற்றை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட பல்விடைத் வினாக்களுடன் கூடிய வினாப்பத்திரமாக அமையும். |

குறிப்பு:

சகல எழுத்து மூல விடைப்பத்திரம் தொடர்பில் தெளிவற்ற கையெழுத்து மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் தொடர்பில் புள்ளிகள் குறைக்கப்படும். சித்தியெய்வதற்காக ஒவ்வொறு வினாத்தாள்களுக்கும் குறைந்தப்பட்சம் 40% மான புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் மத்தியில் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும் அதிகபட்ச வரிசைகிரம முன்னுரிமை அடிப்படையில் தகைமை வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**14. பொய்யான தகவல்களை வழுங்குதல்:**

இப்பரீட்சையில் அமர்வதற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமை இல்லை என தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைப்பெறும் போதோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ அல்லது எந்தவொறு சந்தர்பத்திலோ அவரின் பரீட்சை உரிமை இரத்து செய்யப்படுவதற்கு இயலும். சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் வழங்கிய யாதேனும் தகவல் பொய்யானதாக அல்லது வேண்டுமென்ரே பொய்யான தகவல்களை வழங்கியுள்ளார் என தெரிய வந்தால் அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்ரே மறைத்துள்ளார் என தெரிய வந்தால் அவரின் சேவையானது முன் அறிவித்தல் இன்றி முடிவுறுத்தப்படும்.

**15.** இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் / ஆட்சேர்ப்பு செய்யாமலிருத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கையினது ஒரு பகுதியினை நிரப்புதல் அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்ப்பில் அல்லது இது தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்ப்பில் இறுதித் தீர்மானமானது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படும். அதேபோல இவ்வறிவித்தலின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத ஏதேனும் விடயங்கள் காணப்படின் அது தொடர்ப்பில் விவரித்தல் / தீர்மானம் எடுத்தல் ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக மேற்கொள்ளப்படும்.

காமினி மஹிந்தபால ஜோபியஸ்
செயலாளர்
ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

2020.09.28 ம் திகதி
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு
பதுளை.

(அலுவலக உபயோகத்திற்காக)

**ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கால்நடை அபிவிருத்தி உபதேசகர் பதவியின் 111 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2020**

A. தாங்கள் உரித்தாகும் மாவட்டம் மற்றும் மாகாணத்தினை குறிப்பிடுக :
(பதுளை-01/மொணராகலை-02)

B. மொழி மூலம்: (சிங்களம் - 01/ தமிழ் - 02/ ஆங்கிலம் - 03)

1. பெயர்:
   1.1 முதலெழுத்தை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெபிடல் இலக்கத்தில்):

   Rev./Mr./Mrs./Miss. ……………………………………………………………………………………...

   உ.தா.: PERERA A.B.C. (இதில் Rev./Mr./Mrs./Miss ஆகிய சொற்களில் தேவையற்ற சொற்களுக்கு குறுக்கு கோடிடுக)

   1.2 முழுப்பெயர் (ஆங்கில கெபிடல் இலக்கத்தில்) : ……………………………………………………………

   ……………………………………………………………………………………………………………

   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ……………………………………………………………

   ……………………………………………………………………………………………………………

2 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெபிடல் இலக்கத்தில்): ……………………………………………………

   ……………………………………………………………………………………………………………

   2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ……………………………………………………………

   ……………………………………………………………………………………………………………

   2.3 தொலைப்பேசி இலக்கம் : ……………………………………………………………………………

3 3.1 பால் : பெண் - 1 / ஆண் - 0

   3.2 பிறந்த தினம் : வருடம் மாதம் திகதி

   3.3 2020.10.29 திகதிக்கு வயது : வருடம் மாதம் நாட்கள்

   3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம்:

4. 4.1 மாவட்டத்தில் எப்போதிலிருந்து வசிக்கின்றீர்கள்? ……………………………………………………

   4.2 வதியும் பிரதேச செயலாளர் பிரிவு : ……………………………………………………………

   4.3 வதியும் கிராம உத்தியோகத்தர் பிரிவு : ……………………………………………………………

5 கல்வித் தகைமைகள்:

5.1 க.பொ.த. (சா/த) பரீட்சை:

வருடம்:........... பரீட்சை இலக்கம்:............

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

5.2 க.பொ.த. (உ/த) பரீட்சை:

வருடம்: .......................... பரீட்சை எண்: ..........................................

| பாடம் | சித்தி |
|---|---|
| | |
| | |
| | |
| | |

5.3 பெற்றுக்கொண்டுள்ள டிப்ளோமா / ஏனைய பாடநெறிகள் பற்றிய விபரங்கள்

| டிப்ளோமா / பாடநெறி | நிறுவனம் | பாடங்கள் | செல்லுப்படியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | வருடம் |
| | | | மாதம் |
| | | | திகதி |
| | | | |

**6** ஏனைய தகைமைகள் : ......................................................................................................................................

......................................................................................................................................

......................................................................................................................................

**7** தாங்கள் எப்போதாவது அல்லது ஏதாவது ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீர்களா? ஆம் / இல்லை

ஆம் எனின் விரிவாக கூறவும். ......................................................................................................

......................................................................................................................................

8 பரீட்சை கட்டணம் செலுத்தியமை தொடர்பிலான விடயம்:

8.1 பரீட்சை கட்டணம் செலுத்திய மக்கள் வங்கிக் கிளை: ........................................................................

8.2 பணம் செலுத்தப்பட்ட திகதி மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்: ...............................................................................

8.3 செலுத்திய கட்டணம்: ..................................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டினை கழறாதவாறு இக்கட்டத்தினுள் ஒட்டவும்<br>(பற்றுச்சீட்டில் நிலழ்பட பிரதி ஒன்றினை தம்மிடம் வைத்திருப்பது நன்று) |

**9 விண்ணப்பதாரியின் சான்றிதல்:**

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுப்படுத்துகின்றேன். இதில் ஏதேனும் பிரிவு பூரணமாக்கப்படாமையினால் அல்லது பிழையாக நிரபப்படுதலினால் ஏற்படும் நட்டத்தினை பொறுப்பேற்க வேண்டும் என ஒப்புக்கொள்கின்றேன். மேலும், இதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்களையும் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக ஒப்புக்கொள்கின்றேன்.

என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னதாகவே தகைமையற்றவராக அல்லது நியமனத்தின் பின்னரான சந்தர்ப்பத்தில் பதவி முடியுறுத்தப்படுவதற்கும் கீழ்படிகின்றேன் என இத்தால் அறிவிக்கின்றேன்.

திகதி: .............................                                                    ....................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல்:**

இவ்விண்ணப்பத்தினை முன் வைக்கின்ற ........................................................................................................ விலாசதில் வசிக்கும் திரு./ திருமதி./செல்வி. ................................................................................. நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் ............................................ம் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி: .............................                    ...................................................................................................

கையொப்பத்தினை சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

சான்றுப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ...........................................................................................

பதவி : ...........................................................................................

விலாசம் : ...........................................................................................

(உத்தியோகபூர்வ முத்திரையினை இடுக)